tnkalvi.online

No. of Printed Pages : **8**

5051

பதிவு எண்

பகுதி I – பொதுத் தமிழ்

Language — Part I — TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம்] [மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும், அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I

குறிப்பு : (அ) **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **14x1=14**

(ஆ) கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. ''தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை'' என்று கூறியவர் ?

(அ) இரசூல் கம்சதோவ் (ஆ) சு. வில்வரத்தினம்

(இ) வால்ட் விட்மன் (ஈ) இந்திரன்

2. வடகரை நாட்டுத் தாமரைத் தடாகத்தில் துள்ளிப் பாய்ந்து விளையாடுபவை :

(அ) முதலைகள் (ஆ) சங்குகள் (இ) மேகங்கள் (ஈ) மீன்கள்

3. ஒப்புரவு என்பதன் பொருள் _____.

(அ) ஊருக்கு உதவுவது (ஆ) அடக்கமுடையது

(இ) செல்வமுடையது (ஈ) பண்புடையது

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

4. ‘அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்’ – யார், யாரிடம் கூறியது ?

(அ) அமைச்சர் மன்னரிடம் (ஆ) அமைச்சர் கவிஞரிடம்

(இ) மன்னர் அமுதவல்லியிடம் (ஈ) மன்னர் அமைச்சரிடம்

5. பேச்சு என்பது மொழியில் _____.

(அ) பறப்பது (ஆ) நீந்துவது (இ) ஓடுவது (ஈ) மூழ்குவது

6. குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் சொல் :

(அ) துட்டு (ஆ) தட்டு (இ) மெட்டு (ஈ) கட்டு

7. KVT COMPLEX என்பதன் பொருள் :

(அ) குறிஞ்சி வஞ்சி திருச்சி வளாகம்

(ஆ) குறிஞ்சி வஞ்சி தொண்டி வளாகம்

(இ) கொற்கை வாஞ்சி தண்டை வளாகம்

(ஈ) கொற்கை வஞ்சி தொண்டி வளாகம்

8. ‘என் வாழ்வு என் கைகளில்’ என்று நம்பியவர் :

(அ) பெரியார் (ஆ) சுந்தர ராமசாமி

(இ) கல்கி (ஈ) ஜீவா

9. ‘தவமும் ஈகையும்’ - இச்சொற்களின் இலக்கணக் குறிப்பு :

(அ) உவமைத் தொகை (ஆ) எண்ணும்மை

(இ) பண்புத் தொகை (ஈ) உம்மைத் தொகை

10. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

(அ) உதவியாள் (ஆ) காவலாளி

(இ) ஆசிரியர் (ஈ) மேலாளர்

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

11. தவறான இணையைத் தேர்வு செய்க.

(அ) கடல் + அலை - உயிர் + மெய்

(ஆ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்

(இ) மண் + வளம் - மெய் + மெய்

(ஈ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

12. தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் _____ மேற்பட்ட துறைகளுக்குக் கலைச்சொற்களை வெளியிட்டுள்ளது.

(அ) ஐம்பதிற்கும் (ஆ) பத்திற்கும்

(இ) நூற்றுக்கும் (ஈ) இருபதிற்கும்

13. 'பேசு' என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்றைத் தேர்க.

(அ) பேசினார் (ஆ) பேசிய (இ) பேசியவர் (ஈ) பேசி

14. 'காட்டின் மூலவர்' என அழைக்கப்படும் விலங்கு ?

(அ) புலி (ஆ) யானை (இ) சிறுத்தை (ஈ) சிங்கம்

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. **3x2=6**

15. 'ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின' – இத்தொடரின் பொருள் யாது ?

16. ''ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்''
- இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது ? பழுத்தது எது ?

17. திருச்சாழல் என்பது யாது ?

18. மாசில்லாத உயர் தமிழ் பற்றி பாரதிதாசன் கூறும் கருத்துக்கள் யாவை ?

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு - 2

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. **2x2=4**

19. கவிதை என்பது எது ?

20. ''கோட்டை'' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது ?

21. ஜீவா அவர்களின் நெஞ்சோடு வளர்ந்த கனவு யாது ?

பிரிவு - 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. **7x2=14**

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) செங்கயல் (ஆ) புவியாட்சி

23. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
(அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
(ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

24. பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
குரை, குறை

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
பிண்ணாக்கு

26. புதிர்களுக்கான விடைகளை எழுதுக.
(அ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும்
எழுதலாம். அது என்ன ?
(ஆ) அறிவின் பெயரும் அதுதான்;
அம்புலியின் பெயரும் அதுவேதான்; _____.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

27. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.

(அ) ESCALATOR (ஆ) PROSPECTUS

28. விடைக்கேற்ற வினாவை எழுதுக.

திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப்.

29. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.

(அ) (ஆ) 

30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து
கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. **2x4=8**

31. 'வளருங் காவில் முகில் தொகை ஏறும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. 'குற்றாலக் குறவஞ்சி' – குறிப்பு வரைக.

33. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை ? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.

34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை ?

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. **2x4=8**

35. வாளினும் வலிமை பெற்ற மொழியின் சிறப்பினை எழுதுக.

36. மலைக்குடியிருப்புகள் குறித்து நீவிர் அறிவன யாவை ?

37. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை ?

38. ஜீவா தம் பசுமையான எண்ணங்களை எவ்வாறு பதிவு செய்கிறார் ?

பிரிவு - 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. **3x4=12**

39. உருவக அணி (அல்லது) சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக.
அயல்நாட்டில் வசிக்கும் நீங்கள், உங்கள் மண்ணின் நினைவுகளை நண்பருடன் பகிர்வது போல் கற்பனைக் கடிதம் எழுதுக.

41. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

42. விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.
(அ) தனிமொழி அறிவு; _____ - வண்ணமயில்; பொதுமொழி _____.
(ஆ) எழுத்து, சொல், _____, யாப்பு, _____.
(இ) எழுத்து, _____, சீர், தளை, _____, தொடை.
(ஈ) சேரன்-வில், சோழன் - _____, _____ - மீன்.

43. தமிழாக்கம் தருக :

The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

43. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா :

பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

தமிழ் மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகள், அளவுகடந்து உள்ளன. அவற்றை வெளிக்கொணர்ந்து, வீரிய உணர்வுடன் வெளியிட்டவர் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆவார். இராமேசுவரத் தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்துபோன மருங்காப்பட்டினம் போன்ற தனித்தன்மை கொண்ட அவர்தம் கட்டுரைகள் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின. கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் முதலிய நூல்கள் அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள். அவருளைய 'களப்பிரர் காலத் தமிழகம்' என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

அவர் ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்றாசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980 -ஆம் ஆண்டு, 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது.

வினாக்கள் :

(1) மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் தனித்தன்மை கொண்ட கட்டுரைகள் யாவை ?

(2) சீனி. வேங்கடசாமி அவர்களின் ஆய்வு நூல் எது ?

(3) மதுரைப் பல்கலைக்கழகம் அளித்த பட்டம் எது ?

(4) மயிலை சீனி. வேங்கடசாமி எந்தெந்த மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர் ?

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் **இரு பக்கங்களுக்கு மிகாமல்** விடை தருக. **3x6=18**

44. (அ) 'மதீனா நகரம் ஒரு வளமான நகரம்' என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

அல்லது

(ஆ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்'

-இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

45. (அ) ''மேடையில் வாழ்ந்த மனிதர்'' என்னும் தொடர் ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

அல்லது

(ஆ) ''இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன''

-இக்கூற்றினை மெய்ப்பிக்கவும்.

46. (அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை ?

அல்லது

(ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி நீங்கள் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

பகுதி - V

47. **அடிபிறழாமல்** செய்யுள் வடிவில் எழுதுக. **4+2=6**

(அ) 'சிற்றூரும்' ..... எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.

அல்லது

(ஆ) 'இளைதாக' ..... எனத் தொடங்கும் பகைத்திறம் தெளிதல் அதிகாரத்தில் அமைந்துள்ள குறட்பா.

- o O o -

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-tamil-public-september-2021 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share